T-UN-480

உ

ஸ்ரீ:

வைதிக தர்ம ஸங்கம்.

தமிழ் தேசம்.

அந்தரங்க கைங்கரிய ஸபை.

# அங்கத்தினர்கள் விதியும் கடமையும்

49.

கு. கிருஷ்ணமூர்த்தி சர்மா

ஸ்ரீகார்யம்.

கோமல்

குத்தாலம் வழி.

தஞ்சாவூர் ஜில்லா.

ஸ்ரீ:

# வைதிக தர்ம ஸங்கம்
# தமிழ் நாடு

வைதிக தர்ம ஸங்கமானது வைதிக தர்ம பிரசாரத்தின் நிமித்தம் சிரத்தாளுக்களான கர்மானுஷ்டானம் செய்து வரும் லௌகிக, வைதிக பிராம்மணர்களின் ஸங்கமாகும்.

## கிராம ஸங்கம்

இது அக்ரஹாரங்கள் உள்ள பல் கிராமங்களுக்கு ஆதாரவைக் கொடுப்பதாய் ஒரு தாலூக்காவின் முக்கிய பட்டணத்தில் அல்லது வேண்டிய ஸௌகரியங்கள் நிறைந்த ஒரு பெரிய கிராமத்தில் அமைக்கப்படுவதாகும்.

## நகர ஸங்கம்

இது பல கிராமங்களுக்கு ஆதாரவாக ஒரு ஜில்லாவின் முக்கிய பட்டணத்தில் அல்லது வேண்டிய ஸௌகரியங்கள் நிறைந்த ஒரு நகரத்தில் அமைக்கப்படுவதாகும்.

## தேச ஸங்கம்

தேசபாஷை ஒன்றைப் பிரதானமாகக் கொண்டு எவ்வள்வு விஸ்தீர்ணமுள்ள ஒரு தேசம் தனியாகப் பிரிக்கப்படக்கூடுமோ அந்த தேசத்திற்கு ஆதாரவாயும், மற்ற கிராம நகர ஸங்கங்களுக்குத் திலகம் போன்றதாயும் பெருமை அடைந்து வைதிக ஸமூஹத்தைக் காத்துவரும் ஸங்கமாகும்.

## அந்தரங்க கைங்கர்ய ஸபை

இந்த ஸபை, தேச ஸங்கத்துக் காரியங்களில் ஈடுபட்டு நிற்கும். ஸமூஹத்திற்கும் தர்மத்திற்கும் கைங்கர்யம் செய்ய ஆவல் உள்ள சிரத்தாளுக்களான கிரஹஸ்தர்கள் பிரதிக்ஞை ஏற்று இந்த ஸபையில் சேரவேண்டும். இவர்களே ஸபையில் முக்கிய அங்கத்தினர்கள். இவர்கள் தங்கள் காரியங்களில் உதவி செய்ய அதிகாரிகளான சில வித்வான்களையும் சில லௌகிகர்களையும் கௌண அங்கத்தினர்களாக சேர்த்துக் கொள்வார்கள். இந்த ஸபைக்கு ஒரு பரம ஹம்ஸ பிக்ஷு ஸன்யாஸிகள் ஸ்ரீபாதராஜர் என்ற பட்டத்துடன் தலைவ ராக இருப்பார்கள். கைங்கர்யபரர்களில் ஒருவர் **ஸ்ரீகார்யம்** என்ற பட்டத்துடன் ஸபைக் காரியங்களைக் கவனித்து வரு வார். **ஸ்ரீபாதகைங்கர்யம்** என்ற பட்டத்துடன் பதினாறு வயதிற்கு மேல்பட்ட பிரம்மசாரிகள் ஸ்ரீபாதராஜர் ஆக் ஞைக்குக் கீழ்பட்டு ஸங்க காரியங்களில் ஈடுபட்டு வருவார்கள்.

## மந்திராலோசனை ஸபை

ஒவ்வொரு நகர ஸங்கத்திற்கும் தனித்தனி ஒரு மந்தி ராலோசனை ஸபை உண்டு. இந்த ஸபையில் 72 ஸ்தானம் மஹாஜனங்களுக்கும் உண்டு. இவர்களுக்கு விசிஷ்டர்களுக் கான யோக்கியதைக்குமேல் இருக்க வேண்டும். இவர்கள் 10 பஞ்சாயத்துக்களாகப் பிரிந்து ஸங்கத்துக் காரியங்களைக் கவனித்து வருவார்கள்.

பத்து பஞ்சாயத்துக்களாவன :—

1. நகர நிர்வாஹ பஞ்சாயத்து.
2. தந நிர்வாஹ பஞ்சாயத்து.

3. வைதிக பஞ்சாயத்து.
4. ஆராய்ச்சி பஞ்சாயத்து.
5. வித்யாபிவிருத்தி பஞ்சாயத்து.
6. தொழில் பஞ்சாயத்து.
7. தர்ம பிரசார பஞ்சாயத்து.
8. ஜாதி பஞ்சாயத்து.
9. தபோவந பஞ்சாயத்து.
10. காவல் பஞ்சாயத்து.

இந்த ஸபையின் அதிகாரிகள் :—

அக்ராஸனாதிபதி
பிரம்மா
வக்தா
ஸ்ரீகார்யம்
ஸ்ரீகிரம கார்யம்

ஆக ஐவர் ஆவார்கள்.

## அங்கத்தினர்கள் லக்ஷணம்.

1. ஸாமான்யர் :—சிகை, யக்ஞோபவீதம், கச்சம் இவைகளுடன் பிராதஸ்நானம், திரிகால ஸந்தியாவந்தனம் செய்து வருபவர்களாயும் அமாவாஸ்யை, மாதிரு பிதிரு சிராத்தம் முதலிய புண்ணிய காலங்களிலும், உபநயனம் விவாஹம் முதலான விசேஷ காலங்களிலும், வைதிக ஸத்கர்மானுஷ்டானங்களைச் சிஷ்டாசாரக் கிரமப்படி செய்து வருபவர்களாயும் இருந்து வருதல்.

2. **விசிஷ்டர் :**—சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட வைதிக கர்மாக்களைப் பிரதி தினமும், அனுஷ்டித்துவந்து

உள்ளபடி ஸ்மார்த்த சிரௌத லக்ஷணங்கள் பொருந்தி இருப்பவர்களாக இருத்தல்.

3. முக்கியர் :—விசிஷ்டர்களுக்கு உள்ள யோக்கியதை யுடன் ஸமூஹத்தின் க்ஷேமத்தை மிகவும் விரும்பிச் சரீரத் தாலும், திரவியத்தாலும், புத்தியாலும் உழைக்கக் கூடியவர் களாய் இருந்து உழைத்து வருதல்.

4. உபதேஷ்டா :—விசிஷ்டர்களுடைய யோக்கியதை உடையவர்களாயும், லௌகிக வாஸனை சற்று குறைந்து, அலம் புத்தி யுள்ளவர்களாயும் வைதிக தர்ம ஸங்கத்து ஆதரவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரம்மசரிய ஆச்ரமங்களில், பிரம்ம சாரிகளுக்கு அனுஷ்டானம், ஆசாரம், வேதம், சாஸ்திரம், கலை, ஆகிய இவைகளைப் போதிப்பவர்களாயும் இருந்து ஆசிரமங்களிலேயே பிரம்மாசாரிகளுடன் சேர்ந்து தங்கள் குடும்பத்துடன் வஸித்து வருதல்.

5. ஆசார்யர் :—உபதேஷ்டாவின் லக்ஷணங்களுடன் பரம்பரா பிராப்தமான சிஷ்டாசாரத்தையும், வேதம் முதலான ஸகல சாஸ்திரங்களையும், குரு சிஷ்ய கிரமமாகப் பிரசாரம் செய்யக்கூடிய யோக்கியதையுடன் கூடியிருத்தல்.

## ஸங்கத்து அங்கத்தினர்களுக்கு அறிவிப்பு :—

1. ஸங்கத்தின் லக்ஷியத்தை உணர்ந்து ஸங்கத்தை அபிமானித்து ஸங்க சக்தியை விருத்தி செய்ய உங்களால் இயன்ற முயற்சியைச் செய்யுங்கள்.

2. அத்தகைய முயற்சி செய்து வருகிறவர்களுடன் அடிக்கடி கூடி ஆலோசனைகள் செய்து ஒற்றுமையாகச் செய்யவேண்டிய காரியங்களை நடத்துங்கள்.

3. சிஷ்டர்களான வித்வான்களிட மிருந்து ஆசாரம், தர்மம் இவைகளை நன்றாகக் கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள்.

4. உங்களுடைய நித்திய கர்மானுஷ்டானத்திற்கு மட்டுமாவது வேண்டிய மந்திரங்களைச் சிரத்தையுடன் ஒரு ஆசார்யரிடம் அத்தியயனம் செய்து கொள்ளுங்கள்.

5. பூர்வாபரப் பிரயோகங்கள் தெரிந்தவரும் ஆசார அனுஷ்டானத்துடன் கூடினவருமான ஒருவரை உங்கள் குடும்பத்து உபாத்தியாயராகக் கொண்டு அவரை அன்புடன் ஆதரியுங்கள்.

6. வைதிக ஸம்பிரதாயத்திற்கு விரோதமில்லாமல் உபாஸகர்களிட மிருந்து நீங்கள் ஜபிக்கத் தகுந்த மந்திரங்களை உபதேசம் செய்து கொண்டு கிரமமாக ஜபித்து வாருங்கள்.

7. முக்கியமாக காயத்திரியை தினந்தோறும் ௧000 ஆவர்த்தி ஜபம் செய்து வாருங்கள்.

8. சிஷ்டர்களான யோகிகளிடமிருந்து பிராணாயாமம் சித்த ஏகாக்கிர அப்பியாஸம் இவைகளை அனுக்கிரஹத்துடன் தெரிந்து அப்பியஸித்து வாருங்கள்.

9. பகவந்நாமம், கலி தோஷத்தையும் ஸமூஹ பாபத்தையும் நிச்சயமாக நிவர்த்தி செய்யுமாகையால் பகவந்நாமாவை உபதேசம் செய்துகொண்டு அதிகமாக ஆவர்த்தி செய்யுங்கள்.

10. பகவத் குணங்களைப் பக்தர்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு தினந்தோறும் சிரவணம் செய்யுங்கள்.

11. மஹாபாரதம், ஆசாரம், தர்மம், வேதரஹஸ்யம், ஸமூஹ க்ஷேமம் இவைகளுக்கு இருப்பிடம். ஆகையால் அதைப் பாராயணத்துடன் தகுந்தவர்கள் வியாக்கியானம் செய்ய அடிக்கடி சிரவணம் செய்யுங்கள்.

12. தானம், தபஸ் இவைகள் ஸாதாரண தர்மங்கள். வர்ண ஆச்ரம தர்மங்கள் விசேஷ தர்மங்களாகும். ஆத்ம குணங்களுடன் கூடின ஸாதாரண தர்மானுஷ்டானம் இன்றி விசேஷரூப வர்ணாச்ரம தர்மானுஷ்டானம் சோபிக்காது. இதை யுணர்ந்து கிரமமாக மூன்றையும் ஸேவியுங்கள். இங்கு யக்ஞம் என்பது க்ருஹங்களில் நித்தியமான பகவத் ஆராதனம். தானம் என்பது நியாயமாக ஸம்பாதிக்கப்பட்ட தன தான்யங்களைத் தேச கால பாத்திர மறிந்து நல்ல மனதுடன் கொடுத்தல். தபஸ் என்பது பகவத் கீதையில் சொல்லிய ஸாத்வீகமான மானஸிக, வாசிக காயிக தபஸ் ஆகும். இவைகளை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

13. சிஷ்டாசாரம், ஸம்பிரதாயம், குலதர்மம், இவைகளைச் சிரத்தையுடன் ரக்ஷித்து வரவேண்டிய, கடமையை உணருங்கள்.

14. ஸங்கத்தின் ஆதரவில் நடக்கும் கூட்டம் உபன்யாஸம் இவைகளுக்குத் தவராமல் வந்து கலந்துகொள்ளுங்கள்.

15. ஸங்கத்தின் காரியங்களும், தர்மப் பிரசாரம் வித்யாப் பிரசாரம் முதலியனவும், திரவியம் இல்லாமல் நடக்காது. மனுஷ்ய பலம் இல்லாமலும் நடக்காது; ஆகையால் ஸங்கத்திற்கு நீங்கள் சேர்ப்பிக்கத் தகுந்த தன தான்யங்களை வீதாசாரப்படி காலம் கடத்தாமல் அதிகாரிகளிடம் சேர்த்து வாருங்கள்.

16. ஸங்க அதிகாரிகளால் உங்களிடமிருந்து எதிர் பார்க்கப்படும் எவ்விதமான உபகாரத்தையும் உழைப்பை யும் முழு மனதுடன் நீங்களாகவே கொடுக்க முன் வரவேண் டும்.

17. உங்கள் ஊர்களுக்கு ஸங்க அதிகாரிகள் வருங் காலத்தில் அவர்களுடன் நேரில் நீங்கள் ஸ்நேஹம் செய்து கொண்டு பரஸ்பரம் சிரேயஸ்ஸை அடையத் தகுந்த வழிகளில் உழையுங்கள்.

18. பிராம்மண இதரர்களான ஆஸ்திகர்களேயும் நீங் கள் உங்களுடன் சேர்த்துக்கொண்டு ஸமூஹம், தர்மம் இவைகளே ரக்ஷிக்க ஸங்கத்திற்கு உதவ வேண்டும்.

19. ஸங்கம், பிராம்மணர் மூலம் ஆர்யஸமூஹம் முழுதிற்கும் பரம க்ஷேமகரமான காரியங்களில் ஈடுபடுகிறது என்பதை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

20. ஆர்யஸமூஹம் முன்காலத்தில் இருந்தபடி செம் மையான நிலைமையில் மறுபடியும் இருப்பதற்கு உங்களது பூர்ண உத்ஸாஹமும் உழைப்பும் ஸர்வேச்வரனது அனுக் கிரஹத்தை முன்னிட்டு ஸமூஹத்திற்குக் கிடைக்கவேண்டும்.

## ஸங்கத்திற்கு தற ஆதாய விவரம்:—

1. ஸங்கத்து அங்கத்தினர்கள் கொடுக்கும் மூன்று மாதத்திற்கு $4\frac{1}{4}$ அணு அல்லது வருஷம் ஒன்றுக்கு, ஒரு ரூபாய் ஒரு அணு.

2. ஸங்கத்து அபிமானிகளால் வாரம் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் ஒன்பது பைசா, அல்லது முக்கால் அணு.

3. மாதம் நூறு ரூபாயும் அதற்கு மேலுமான வரும்படியுள்ள அங்கத்தினர்களால் கொடுக்கப்படும் தொகை—நூற்றுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று.

4. ஒரு வேலி அல்லது அதற்கு மேல்பட்ட நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தில் விளையும் தான்ய வரும்படி நகர ஸங்கத்தாரால் அப்பொழுதுக்கப்பொழுது தீர்மானிக்கும் வீதாசாரம்.

5. மூலதனம் படைத்தவர்களான அங்கத்தினர்களிடமிருந்து கிடைக்கும் வரும்படி. இது விவரம். கடன் ஏதாவது இருந்தால் அந்தத் தொகையைத் தள்ளி பாக்கி இருக்கும் மூலதனத்தில் வட்டிவருமானம் ரூபாய் நூற்றுக்கு ஒன்று வீதம் கிடைக்கும் தொகை.

6. சுப, அசுப விசேஷ காலங்களில் அங்கத்தினர்களால் கொடுக்கப்படும் ஸங்க ஸம்பாவனை பிரதி ஸமயங்களிலும் ஐந்து அணா.

7. குறிப்பிட்ட சில தர்மங்கள் நடந்து வரவேண்டுமென்ற கருத்துடன், ஸங்கத்திற்கும் ஆச்ரமங்களுக்கும் கொடுக்கப்படும் தான வரும்படி இதுகள்—தனம், பூமி, பசு, பதார்த்தங்கள், க்ருஹம், முதலிய பல விதங்களாக இருக்கும்.

The Jupiter Press, Madras.